ஸ்ரீ

# மஹார்ஷி ரமண சரிதம்.

## உபதேச மொழிகள்

(நானார்?)

## உபதேச வுந்தியார்

## ஆன்ம வித்தை


அடங்கியது.

அமரர் கி. அ... முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்
(1982) சீர்காழி.



1928

காபிரைட் ரிஸர்வ்டு] [விலை அணா 5



அருணாசல நிவாஸ
ஸ்ரீ ஈச்வர ஸ்வாமிகள்.

உ

# ஸ்ரீ மஹர்ஷி ரமண சரிதம்.

## உபதேசமொழிகள் (நானார்?)

## உபதேச வுந்தியார்

## ஆன்ம வித்தை

அடங்கியது.

---

இஃது

அன்பர் பலர் வேண்டுகோட் கிணங்க

அருணாசல நிவாஸ

**ஸ்ரீ ஈச்வர ஸ்வாமிகள்**

திருவருட்டுணைகொண்டு

திருவண்ணாமலை

ஸ்ரீ ரமணீய வாணி புத்தகாலயத்தாரால்

பிரசுரிக்கப்பட்டது.

முதற்பதிப்பு 1000 காப்பிகள்.

---

1928

காபிரைட் ரிஸர்வ்டு]

[விலை அணா 5

Printed at the
Nagaraja Printing Works,
Tiruvannamalai.

# முகவுரை.

ஸ்ரீ மஹர்ஷி ரமண சரிதமானது, பவமென்னும் உவர்க்கடல் கடந்து, சிவமென்னும் நவத்வீப முக்தி பவனத்தைச் சேர விரும்பி, தவமென்னும் மரக்கல நடத்துபவர்க்கு, உத்தர துருவத்தைக் காட்டும் திசையறி கருவியாகும். "மகா ஜநோ யேந கதஸ்ஸ பந்தா:" மகான் சென்றது மார்க்கம் என்பதிதன் பொருள். ஆகையினால், மகான்களின் சரிதங்கள் ஏனைய கதைகளைப்போலல்லாமல், அன்னாருடைய அடிச்சுவடிகளைப் பின்பற்றி சென்றமார்க்கத்திற் சென்று அடையவேண்டியதை அடையச்செய்யும் உத்தமமான வழிகாட்டிகளாக இருக்கின்றன. "ஸ்மரணாதருணாசலே" அருணாசலத்தை நினைக்க முத்தி. என்பதற்கு இப்பெரியார் சரிதமொன்றே போதிய சான்று.


இவ்வசனகாவிய நூன்மடந்தை அன்பாகத்திடை இன்புறப் பிறந்து, உயர்ந்தாருளப்பதி ஓங்கி வளர்ந்து, அன்னார் அநுபவ அறிவுரை என்னும் ஆடையாபரணமணிந்து, தமியே னிச்சைகொண் டச்சுவாகனமேறி, தமிழுல கெங்குந் திருப்பவனி வர வெளிப்போந்தனள். நல்லோர் பிறர் குற்றம் நாடார்.

ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயம்.
திருவண்ணாமலை.

விதேயன்
கோபாலன்.

கீழ்க்கண்டபடி இப்புத்தகத்திலுள்ள பிழைகளைத் திருத்திக்கொண்டு வாசிக்கவும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| முகவுரை | 9 | சுவடி | சுவடு |
| 1 | 24 | ரதீ | ரத |
| 11 | 10 | ரங்சி | ரங்கி |
| 5 | 5 | டர்தி | டர்ந்தி |
| 11 | 24 | ஈசல் | ஈசெல் |
| 18 | 10 | கப்ப | கப |
| ,, | 23 | தோரு | தொரு |
| ,, | 24 | ழ்க்க | ட்க |
| ,, | 26 | ன்னா | ந்நா |



ஸ்ரீ ரமண மஹர்ஷிகள்.
திருவண்ணாமலை.





# ஸ்ரீ மஹர்ஷி ரமண சரிதம்.

## காப்பு.

### திரு வருணை விநாயகர் துதி.

### சந்த விருத்தம்.

அங்கைகுவித் தேபுளகித் தலர்தூவி
அன்பிருகட் டாரைவடித் தடிசூடி
தெங்கடிசிற் பாயசமுக் கனிபூரி
சிந்தைமுதற் காரணநிற் கிடுவேனே
தங்குமுளத் தோடுடல்சொற் பொருளாவி
தந்துனையுற் றேனிடருக் கிடர்தாராய்
செங்கமலக் காடிணைபொற் றிருமேனி
சிந்துரசிற் றுனைமுகப் பெருமானே.

### கலைமகள் துதி.

மடந்தை பாகன் மலையுரு வாகிவி ணவர்பேண
மலிந்த ஞானங் கருமரு ணாசல மதுநாடி
அடைந்த பாலன் றனிமையி லாதர வுடனுக
அழுங்கு மாரன் பசியற வேயுண விடுதாய்நேர்
கடங்கு லாவும் சரஸிஜ மேல்வள ரயனோடும்
சமைந்து யாழின் னிசைதரு மாகம கலைவாணி
கடைந்த பாலின் கடலெழு மாரமு தெனநாவில்
கலந்து நாளும் பொருளொடு வாசக மருள்வாயே.

**மதுரை**:—பூமண்டலத்தில் இமயத்தை வடக்கெல்லையாக வுடைய, கடல் சூழ்ந்த பாரதீ தேவியின் திருமுக மதி மண்டலமெனத் திகழ்வதும், இந்திரனிருந் தரசுசெய்யும் அமராவதியும் நாண சோமசுந்தரனிருந் தரசுசெய்ததும்,

வானுள் சிவபரன் *மேனாள் §வதுவைசெய் மீனாட்சியம்மை ○தானாட்சி செய்ததும், ஒரு சங்கந் தாங்கி நின்ற திருமால் நாண செந்தமிழ் †முச்சங்கங்களைத் தாங்கி நின்றதும், நற்றாமரை மலர் மானத வாவியைத் தன்னிடங்கொண்ட கைலையும் நாண பொற்றாமரை மலர்த் ¶தேனுகுவாவியைத் தன்னிடங் கொண்டதும், செங்கண்மால் துங்க பாதத்துதித்த கங்கையும் பங்கமுற, ||திங்களிலங்கித் தங்குசடைமுடி சங்கரன் அங்கயற்கண்ணம்மையின் பங்கயக்கரம் பற்றிய மங்கல வதுவைநாள் கிங்கரனுதர வெங்கனல் தணிய இரங்கி யருள் கையிற்பொங்கி, தெங்கினங்களி னங்குலைகளை அலைத்தோடும் வைகை நீர் பாவுவதும், சூரியனொளியால் துரத்தப்பட்ட இருட்கூட்டங்கள் சரண்புகுந்திருந்ததெனும்படி கருத்தடர்ந்து வானுறவோங்கி வளர்ந்து தண்மதியமும் வெப்பந்தீர இறங்கி வசிக்க விருப்புறும்தாமரைவாவிகள் நிறைந்த சோலைகளால் வளப்ப முடையதுமான பாண்டிய நாட்டின் ராஜதானி; "மதுரைமா" நகரம்.

திருச்சூழியல்:—இந்நகரத்திற்குத்தென்பால் கவுண்டினிய மென்னும் "பாபஹரி" தெய்வத்திருநதி சூழ்ந்ததும், "துணைமாலையம்மை, திருமேனிநாத" ரெனும் அம்மையப்பர் திருக்கோயில் கொண்டெழுந்தருளியதும், கவ்வைக்கடல் என்னும் புண்ணிய ‡வாவியையுடையதும், மாணிக்க

---

*மேனாள் - முற்காலத்தில், §வதுவை - கலியாணம், ○தானாட்சி - தான் அரசாட்சி, †முச்சங்கம் - முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம், ¶தேனுகு - தேனைச்சொரிகின்ற, ||சிவன் மீனாட்சியைக்கலியாணம் செய்துகொண்ட நாளில் குண்டோதரன் பசிதணிய சிவனருளினாலுதித்த வைகை நீர் பாய்வதும் என்பது கருத்து.

‡வாவி - குளம்,

வாசக சுவாமிகளாலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் திருக்கோவை தேவாரப்பதிகம் ०பாடப்பெற்றதும் திருச்சுழியல் என்னும் மகாஸ்தலம்.

**தந்தை:**—இத்தலத்தில் அந்தணர்§மரபிலுதித்த பாராசரகோத்திர திலகரும், உள்ளூர் நீதி மன்றத்துயர்தர ||ஞாயவாதியும், இல்லறத்தவர்களுக்கு ஓர் உதாரணராய் வைதேக ஞான ஜநகனென கிருகயஞத்தை நடத்துகின்றவருமான **சுந்தரமய்யர்.**

**தாய்:**—அன்னாரின் தர்ம பத்தினியாகி, அரசனுக்கு அமைச்சன் போன்றவளும், சாயை போல *பதியை அனுசரிக்கின்றவளும் ¶பொற்பிற்றிருமகள் கற்பிற் கருந்ததியெனத்தக்க வளுமாகிய †சதி அழகம்மை.

**அவதாரம்:— விருத்தம்**

உருக்கொள வொளிவிட் டோங்கு முயர்தா நித்தி லத்தைக்
கருக்கொளத் தாங்கி நின்ற கரும்பினங் கயற்க ணம்மை
பருக்கொள வமுத மூற்றும் பயோதர மிதிற் றூங்கி
குருக்கொளுந் தாதை முத்துக் குமாரனே யென்ன வீன்றாள்.

இதன் பொருள்

உருவந் தரித்துமளவில் ஓங்கிப் பிரகாசிக்கின்ற உயர்ந்த முத்தினை கருத்தரித்து நின்ற கரும்பேபோல், அழகிய Xகயல்போன்ற கண்களுடைய அழகம்மை கருப்பந்தரித்து அமுதம் சுரந்தூற்றும் பருத்த பயோதரங்களை அரிதிற் சுமந்து தந்தை (சிவன்) குருவாகக்கொண்ட முத்துக்குமாரனை.

०இப்பாடல்கள் இப்புத்தகத்தின் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

§மரபு - குலம், ||ஞாயவாதி-வக்கீல், *பதி-கணவன், ¶பொற்பிற்றிருமகள்-அழகில் லக்ஷ்மி, †சதி-மனைவி, Xகயல்-மீன்,

அங்கயற்கணம்மையாகிய மீனாட்சி பெற்றதுபோலப் பெற்றெடுத்தாள்.

**ஜாதகம்:—** கலி 4980 பிரமாதிஹ மார்கழிமீ 16௳ சோமவாரம் புனர்பூசம் உதயாதி நாழிகை 48-க்குமேல் துலாலக்கினத்தில் ஜநநம்.

குருதசையில் ஜநநகாலத்தில் பாக்கி வருஷம் 5 மீ 6.

| | | | |
|---|---|---|---|
| சனி | செ | | சந் கேது |
| குரு | ராசி | | மாந்தி |
| | | | |
| ரா | சு பு | ல | |

ஜாதகன்மநாமகாணங்கள் — விருத்தம்.

உருவமு நாம மின்றி ஒளிதரு முலகிற் கெல்லாம்
பெருவெளிப் பிழம்பாய் நிற்கும் பெற்றியைப் பெற்றோ ரன்பால்
விரிவுறச் சாத கன்மம் விளக்கிநல் வேங்க டஞ்சேர்
குருவரு ரமண னென்றே குலவிய நாம மிட்டார்.

(இதன்பொருள்) உலகனைத்தையும் ஒளிர்விப்பதாய் *சித்கனப்பெருவெளியாய் நிற்கின்ற தன்மையா மொன்றைப்பெற்ற தாய்தந்தையர் அன்பினால் ஜாதகன்மம் என்கின்ற சுபச்சடங்கை விரிவுறச்செய்து, நாமரூபமற்ற அவ்வொன்றிற்கு அழகிய குருரூபமான **வேங்கடரமணன்** என்கின்ற பொருத்தமான திருநாமமிட்டார்கள்.

தவப்பெயர் —: ரமணமஹர்ஷி.

*சித் - ஞானம்.

## வித்தியாப்பியாச உபநயனங்கள் விருத்தம்.

செப்பிடு வித்தைக் கெல்லாம் சேர்ந்தவா தார மான
வொப்பிலா வொன்றை யீன்றோ ருணர்வுறப் பள்ளி சேர்த்
துப்புறு நூலனைத்துந் தொடர்திடாத் தாயமெய்க்கு [தார்
முப்புரி நூலொன் றிட்டார் முனிவா ராசி கூர்ந்தார்

(இதன்பொருள்) சொல்லப்படுகின்ற வித்தைகளனைத்திற்கும் மூலாதாரமான தன்னிகரற்ற ஒன்றை தாய்தந்தையர் கல்வி யறிவு வளர்வதற்காக *பள்ளியில் வைத்தார்கள். வல்லமைபெற்ற (மறைமுதலிய) கலைகளத்தனையும் பின்பற்றாத (எட்டாத) பரிசுத்தமான வஸ்துவிற்குப் பெற்றோர்கள் முப்புரிநூலொன்றிடலாகிய உபநயனமென்னும் மங்களச்சடங்கை நடத்தினார்கள்; அந்தணர்கள் ஆசீர்வாதஞ்செய்தனர்.

சோதர சோதரிகள்:—தமையன்:—நாகசாமி ஐயர்
தம்பி:—நாகசுந்தரமையர்
தங்கை:—அலர்மேலுமங்கை.

**தந்தையின்†சரமக்கிரியை:**—தமையனுந்தானும் திண்டுக்கல்லிலும் பின்னர் மதுரையில் கிறிஸ்தவ ஆங்கில கலாசாலையிலும் படித்து வருகையில் பன்னிரண்டாம் வயதில், தந்தை நோய்வாய்ப் பட்டதறிந்து தமையனுந்தானும் வந்திருக்க, ||ஆதுலர் தமக்கு அமுதமாகவும், சரித்திரர் தமக்குத் தனநிதியாகவும், பிறர்மனைவியர்க்குடன் பிறந்தவனாகவும், சொந்தமனைவி தன் சுந்தரனாகவும், கலகமிட்டவோர் ¶காவலனாகவும், கோத்திரக்கடற்கொரு ○குளிர்மதியாகவும்,

---

*பள்ளி - கலாசாலை, †சரமக்கிரியை - மரணச்சடங்கு,
||ஆதுலர் - பிணியாளர், ¶காவலன் - அரசன்,
○குளிர்மதி - சந்திரன்.

பசித்தவர் தமக்குப் பாற்கடலாகவும், நாட்டினர் தமக்குயர் ஞாயவாதியாகவுமிருந்த தந்தை சுந்தரமையர் திருச்சுழிய லென்னும் திவ்யத்தலத்தில் புகழுடம்பை நிலைநாட்டி பொய் யுடலைநீத்து அருந்தவத்தினருக்கும் கிடைத்தற்கரிய சத்தி யலோகத்தை அடைந்தார்; குதலைவாய் மைந்தர் கோவென் றலறவும், சுற்றத்தவர்பலர் சூழநின்றரற்றவும், தம்பியரிருவ ரும் தளர்ந்து வாடவும், நாட்டினர் பலரும் †நாட்டநீர் பெருக்கவும், §கோதையர் சூழ்ந்து கூந்தலைவிரித்து மார்புறப் புடைத்து வாய்விட்டழவும், அன்புயிர்க்காதலி அஞ்சனவிழி களின் ஊற்றுநீர்ப்பெருக்கால் உடல்முழுக்காட்டவும், தந் தையினுடலைக்கொண்டு தமையனுடன்சுற்றத்தவர்சூழ ‡சுட லைக்குப்போய் தகனக்கிரியைகளை முடித்து, வீடுதிரும்பி சரம க்கிரியைகள் யாவையுமுடித்து தமையனுடன் மதுரையில் கலாசாலையில் படித்துவந்தார். இக்குடும்பத்தை சிறிய தகப் பன்மார் சுப்பையர் நெல்லையப்பையர் இருவரும் பரிபாலித்து வந்தனர்.

**ஓதாதுணர்தல்:**—பள்ளிப்பிள்ளைகளுடன் விளையாடுவ திலும் சரீரப்பயிற்சி முதலியவைகளிலு முற்பட்டவராகி பாடங்கற்பதில் அக்கரை கொண்டாரில்லை. ஆயினும் முற் பகல் கண்டதை பிற்பகல் நினைவிற்காண்பதுபோல உடன் படிப்பவர் ஓதக்கேட்ட அவதானத்தால் அனைத்தையும் ஒப் புவித்து ஆறுவது வகுப்பை யடைய, உலகறிவிற்றோன்றிய நாள் முதல் காணப்பட்ட உலகனைத்தினும் பெரிது "அருண சலம்" என்கின்ற உள்ளொளி ஒளிர, நாளும் கலையும் கூடி வளர்ந்து ஆண்டுகள் பதினாறாய் சோடசகலைகள் நிறைந்த பூரணசந்திரனெனத்திகழ்ந்தனர். தென்மொழி, வடமொழி,

---

†நாட்டநீர் - கண்ணீர், §கோதையர் - பெண்கள், ‡சுடலை - மயானம்.

தெலுங்கு, கோளம், ஆங்கிலமென்னும் பாஷைகளில் எழுதவும் படிக்கவும் கடலைச்சுருக்கிக் கடுகிலடைத்தா லென, அழகிய ஸூத்ரரூபமான கவிகள் கொடுக்கவும் வேதாகம சாரங்களை அநுபவத்துடன்கூட்டி அடைந்தவர்க்குணர்த்தும் வித்தினுள் முளைபோலக் காலத்தில் வெளிப்படுத்தும் சக்தியைத் தனதிடங்கொண்ட கலைவாணியும் பள்ளிப்பருவத்திலேயே உள்ளத்தமர்ந்தனள்.

சக்தி நிபாதம்:—உபய குல ‡தினமணியாகிய இப்பெருந்தகையார் பதினேழாம் ஆண்டு தொடங்கி இருவேறுலகத்தியற்கையும் ஒருங்குடையராய் பெரும்புகழ்க்குரியராய் விளங்கினரேனும் பள்ளிப்பருவத்தில் படிப்பில் கவனஞ்செல்லாது விளையாட்டில் நாட்டமேற நிகழ்ந்த செயல்கள் வெளித்தோற்றத்தில் மற்றைய இளம்பிள்ளைகளின் செயலினும் வேறுபட்டதாக விருக்கவில்லை. பதினாறுண்டுகளாக உள்ளத்தில் ஒளிர்ந்தூறிய அருணாசலேசனருளால் பாடசாலையிற் படித்த §பௌதிகநூ லாராய்ச்சியும் பெரிய புராண முதலிய சிவபக்த சரிதங்களும் துணைக்காரணமாய் நிற்க, மாயவுலகத்தியற்கை, உற்றார் காரியநட்பு, பொய்யுடற்றன்மை, முதலியவைகளை நன்குணர்ந்து, ஐம்புலத்திச்சை அறவே களைந்து, உடலெனுஞ்சிறையின் உள்ளிருத்தலுக்கலுத்து, பூமணத்தவாவி பொற்றாமரையில் மூழ்கி, திருநீறணிந்து மீனாட்சி சுந்தரேசன் சன்னிதி சென்று வணங்கி எழுந்து அஞ்சலியத்தராய் நின்று காலனைக்கடிந்த மாமறைமணத்த பாதாரவிந்தங்களைதியானித்து, ஞானமணங்கமழ்ந்தொளிரும் தேன் பிலிற்று மானதபங்கஜத்தை அன்பு நூலாற் றொடுத்து பரமன் செம்பவளப்பாதங்களிற்சூட்டி, மயிர் பொடிப்ப கண்ணீரருவிபாய அனலிடை மெழுகாய் உள்ளங்கரைந்து, வேண்டா

‡தினமணி - சூரியன், §பௌதிகநூல் - Science.

மையென்னும் †விழுப்பொருளைவேண்டி, நால்வரே முதலா நாயன்மார் சன்னிதிசென்று, மாதவங்கள் பயின்று பாமாலை சாத்திப் பரமனடியடைந்த பழைய அடியாருடன் தன்னையும் ஒருவனாய்க் கூட்டிக்கொள்ளும்படி யாசித்து, பிரிவாற்றாது நாள்தோறும் இல்லந்திரும்புவர். வீட்டில்வந்தும் பாடங்களைப்படியாமல் கண்மூடித் தியானித்திருக்கக்கண்டு, இவர் தமையன் யோகீசுவரரே! ஞானியாரே! என்று பரிகசிக்கத் தொடங்கினர். தன் தமையனிலும் உடல் வலி மிகுந்தவராய் ஏதேனும் கடிந்துரைக்கில் அடிப்பதும் குத்துவதும் திட்டுவதுமாயிருந்த இவர் இக்காலத்தில் மிகப் பணிவுடையராய் யாதொரு பதிலுமுரையாதிருந்தனர். உலகனைத்தினும் பெரிதருணாசலமென்றும், அது சுவர்க்கம், கைலாயம், வைகுண்டமென்னு மிவைகளைக்கடந்து எங்கேயோ இருப்பதாய்க் கருதியிருந்தவர் மன்மதவரு கார்த்திகை மாதத்தில் ஓர்நாள் வழியிற்கண்ட தன் பந்துவை வருவதெங்கிருந்தென வினவ, அருணாசலத்திருந்தெனும் உரையைக்கேட்டதும் வியப்புற்று அருணாசலம் எங்குளதென திருவண்ணாமலை தெரியாதாவெனலும் "திருவண்ணாமலையே அருணாசலம்" எனத்தெளிந்து பல ‡மதி கழிந்தன. கி. பி. 1896-ம் வரு ஆகஸ்டுமீ 29உ சனிக்கிழமை காலையில் கண்மூடித்தியானித்திருக்கையில் தமயன் சிறிது வெகுண்டு இவரைத்திருத்து மெண்ணமுடையவராய் ஆவது இன்னதென்றறியாது "இப்படிக்கெல்லாமிருப்பவனுக்கிங்கென்னவேலை" என்றனர்.

*அருணாசலயாத்திரை:*— §முன்னவன் மொழியையே *முன்னவன் மொழியாய்க்கொண்டு, உள்ளமென்னும்

---

†விழுப்பொருள் - உயர்பொருள், ‡மதி - மாதம், §முன்னவன் - தமையன், *முன்னவன் - ஈசுவரன்

அரணியில் அருணசலமென்னும் தீக்கடைகோலூன்றி தியானமாகிற கடைதலினின்றெழுந்த தீ உடலினை எரிக்க, அன்று உபாத்தியாயர் மின்சாரசக்தியை விளக்குவதற்குப் பாடசாலைக்கு சீக்கிரம் வரச்சொன்னதாய் தமையனிடஞ் சொல்லியெழ, தன்னுடைய பாடசாலைச்சம்பளத்தை எடுத்துப்போய் உபாத்தியாயரிடங் கொடுக்கும்படி அவர்சொல்லித்தந்த ரூபாய் ஐந்தில் மூன்றுமட்டில் எடுத்துக்கொண்டு ஒரு கடிதத்துண்டெடுத்து "நான் என்தகப்பனைரைத்தேடிக்கொண்டு அவருடைய உத்திரவின்படி இவ்விடத்தைவிட்டு கிளம்பிவிட்டேன். இது நல்லகாரியத்தில்தான் பிரவேசித்திருக்கிறது. ஆகையால் இந்தக்காரியத்திற்கு ஒருவரும் விசனப்படவேண்டாம். இதை பார்ப்பதற்காக பணமும் செலவு செய்யவேண்டாம்.

உன்சம்பளத்தை இப்படிக்கு,
இன்னும் செலுத்தவில்லை. — — — —
ரூ. 2 இதோடுகூட இருக்கிறது."

என்றெழுதிவைத்து, பழைய தேசபடமொன்றால் திருவண்ணமலைக்குக்கிட்டிய ரயில்வேஸ்டேஷன் திண்டிவனமென்று நிச்சயித்து, பகல் பன்னிரண்டுமணிக்கு, திரிவிக்கிரமனைநாடித் தவத்திற்கேகிய சிறுவன் துருவன் போலவும், தந்தையை நாடித் தலங்கள்தோறும் பாடியோடிய சம்பந்தமூர்த்தி போலவும், அருணசலத்தைநாடி, தென்திசைக்*கதிரவன்வடதிசைக்கெழுந்தானென மதுரை ரயிலடிசென்று திண்டிவனத்திற்குச் சீட்டுவாங்கி வண்டியேறியோர் மூலையிலமர்ந்து, தியானத்தழுந்தி வழியில் திருவண்ணமலைக்கு வண்டி

---

*கதிரவன்—சூரியன்.

போவதாய் ஒரு §மௌல்வியாலறிந்து, விழுப்புரத்திலிறங்கி ஊரினுட்சென்று பசியாறி மிஞ்சிய சிறு பொருள்கொண்டு மாம்பழப்பட்டு வரையில் வண்டியிற்சென்று, அங்கிருந்து நடந்து தென்பெண்ணைநதியின் வடகரையில் அழகியகற்பாறை மீதமைந்திருக்கும் கனகவல்லி பங்கர் அதுல்லியநாதர் ஆலயமடைந்து, ஆங்கோர் சிவலிங்கத்தருகில் தியானித்திருக்கையில் ஓர் அழகிய ஜோதியைத்தரிசித்து இதுவோ கடவுளென்றெட்டிப் பார்க்கவும் லிங்கமன்றி மற்றொன்றும் கண்டிலராகி, பசிப்பிணி வருத்த அக்கோயில் அர்ச்சகருடன் பெண்ணைத்தென்பால் வைகும் திருக்கோயிலூர் பிருகந்நாயகி பங்கர் வீரட்டானர் ஆலயஞ்சென்று அர்த்தஜாமம் வரையில் தியானித்திருந்து, அக்கோயில் வாத்தியக்காரர் இரங்கி யளித்த கோவில் பிரசாதத்தை வாங்கி வெறுப்புடன் சிறிதுண்டு அவ்விரவைக் கழித்தனர். மறுநாட் காலையில் திருக்களாவூர் முத்துகிருஷ்ணபாகவதர் என்கிற அவ்வூர் அந்தணர் வீட்டில் சிறிது பழையதிரந்துண்டு அழுதுகொண்டிருக்கையில் அவ்வந்தணர் இரக்கமுற்றவராய், ஏனப்பா அழுகின்றாய்? என்ன, அடிகள், தாய்தந்தையரை நினைத்தழுகின்றேன் என்றார். அச்சொல்லின் உண்மைக் கருத்தறியாத அவ்வந்தணர் திரும்பி மதுரைக்குப் போம்படி, ||காதணிகொண்டு பொருளுதவித்தேறுதல் சொல்லியனுப்பினார். அப்பொருளைப் பெற்று ரயில்வண்டியேறி அருணாசலத்தைத் தரிசித்து ஆனந்தமடைந்து வண்டியிறங்கி அருணாசலேசர் ஆலயத்துள் சன்னிதிசென்று, "அப்பனே! உன் உத்திரவுப்படி சன்னிதி வந்தடைந்தேன்" என்றுசொல்லி வணங்கி நிற்றலும் உடலில் எரிவு நீங்கிக் குளிர்ந்தது. இது நிகழ்ந்தது துன்முகிவருஷ ஆவணிமீ கிருஷ்ணபக்ஷம் நவமி(1-9-1896)யில்.

---

§ மௌல்வி—இஸ்லாமிய மதகுரு, ||காதணி—கடுக்கன்.

## ஸர்வஸங்க பரித்தியாகம்

உடனே அங்கிருந்து இந்திர தீர்த்தக்கரைக்குச் சென்று, †சிகை ||யக்ஞோபவீதங்களைக் களைந்து §முண்டனங்கொண்டு, உடுத்த துணியிலோர் கோவணங் கிழித்துடுத்தி, மற்றதையும் கைப்பொருளையும் கரையிலெறிந்து, ஐயமற்ற அதிவருணாச்சிரமியாகி மௌன விரதம்பூண்டு ஆலயம் புகுந்து ஆயிரக்கால் மண்டபத்தமர்ந்தனர்.

தவத்தியல்:—அருணாசலேசனே, ஞானாசாரியனாகி உள்ளத்துள் நின்று அனுபவ அறிவு வாயிலாக அனைத்தையு முணர்த்த, அநித்தியமாய்க் காணப்படும் பொருள்களை நீக்கி, நித்தியமான காண்பானைக் காண முயற்சித்து, இகபர சுகங்களை அனுபவிப்பதில் இச்சையற்று, சுகிக்கின்ற வனைச்சோதித்து, காமாதி அறுபகைவரை வைராக்கிய மென்னும் கட்கத்தாற் சேதித்து, சமாதி பூஷணங்க ளாறையும் சாந்தியோடணிந்து, மோக்ஷமடைய இச்சிக்கின்றவனுடைய பந்தம் எத்தகையது? பெத்தன் யார்? என விசாரித்து, அடுத்ததைப் புசிக்கின்ற ஐந்திந்திரியங்களாகிற பஞ்சாக்கினி மத்தியிற் பசையற விருந்து, சாதனைக்கினிய சுகாதனத்தமர்ந்து, கிடைத்ததை மருந்துபோல் ஓர் பொழுதுண்டு, அருணாசலனும் * அத்தனைத் ¶துருவி அன்னியமாக ஆய்ந்த மனதை ஆய்ந்தவன் யாரென அகமுறத் திருப்பி, பண்டைய வாசனைச் சோனை மழையால் புற்றெழும் ஈசல்போல் வெளிக்கிளம்புகின்ற சங்கற்ப ஜாலங்களை எழுந்த விடத்திலேயே நசிக்கச்செய்து, நன்மை, தீமை,

---

†சிகை—குடுமி, ||யக்ஞோபவீதம்—பூணூல், §முண்டனம்—மொட்டை, * அத்தன்—அப்பன், ¶துருவி—தேடி.

உறவு, பகை, சுத்தம், அசுத்தம், வேண்டுதல், வேண் டாமை, நான், நீ என்கின்ற ³த்துவந்துவங்களற்று, சித் திரம் போலுட லசையாதிருந்து, "மானத வாவி மடுவிடை நின்று தானசையாது துயின்றிடு மீன்போல்" அலர்ந்த செந்தாமரை யனைய அழகிய இமையாநாட்டம் இதய வெளியுற, நினைப்பு மறப்பெனும் சுழலுடன் கூடிய பிராண னென்னும் சண்டமாருதத்தால் உளச்சபைதனி லேகாந் தத்தொளிரும் பண்டைய ஞானதீபம் அசைந்த வியாதபடி கேவலகும்பக சகித ஸகஜநிர்விகற்பசமாதிபரிசுத்தாந்தக்கரண மென்னும், சுத்தமான *கோளவெண்பளிங்கை மேற் சேர்த்து மூடி, சாணையிலிட்டமாணிக்கமணி யென தசை யழகு வற்றித் தவத்தழகு மேலிட்டு, அஜப அக்ஷர அகண்ட மௌனானுபவமுற்று, பூத வுடம்பின் மருவு கரணங்களு முயிரும் உணர்வு மவிழ இரண்டற்ற அதீத துரிய சுகானு பூதி தங்கு மருந்தவத்தினராகி பாலசூரிய னெனத்திகழ்ந்த னர். ஒருதினம் இம்மண்டபமத்தியில் நடராஜர் அபிஷேக மேடை மீதமர்ந்து தியானித்திருக்கையில் சில துஷ்டர்கள் கூடி பின்புறமிருக்கும் சாளரவாயில் வழியாகக்கற்களை வீச, அபயராய், உதாசீனராய் வீற்றிருந்த சுவாமிகளின் திரு மேனியை அக்கற்களி லொன்றுவது தீண்டும் பாக்கியம் பெற்றிலது; அது கண்டு அவர்கள் ஓட்டமெடுத்தனர். அக்காலத்தில் இவ்வாறு நிகழ்ந்த இடையூறுகள் பல வெனி னும் சாந்தி யென்னும் வச்சிர வாளைக் கைக்கொண்டு அவ்விடையூறுகளனைத்தையும் ஜயித்து வெற்றி மாலை சூடி னர். பிறகு இம்மண்டப மத்தியில் மேற்புற மிருக்கும் பாதாளலிங்கம், சிவகங்கைக்குத் தென்பாலுள்ள இலு ப்பை மரத்தடி, கோபுரங்கள், வாகனமண்டபம், வாழைத்

---

³த்துவந்துவம்—இருமை *கோள வெண்பளிங்கு—glass-chimney. (கிளாஸ் சிமினி)

தோட்டம், சுப்பிரமணியராலயம் முதலிய இடங்களில் பனி மழைவெயில்களுக்கஞ்சாமல் ஒரே கோவண உடையுடன் சுமார் ஆறுமாதம் கோயிலுக்குள் தவம்புரிந்திருந்தனர்.

**குருமூர்த்தம்:**—ஊருக்குக் கீழ்புறம் வேட்டவலம் பாதையருகமைந்திருக்கும் திருவண்ணாமலை ஆதீன மூல புருஷரான தெய்வசிகாமணிதேசிகர் சமாதி கோயிலுக்குப் பூஜைசெய்து கொண்டிருந்த அண்ணாமலைத் தம்பிரான் என்னும் ஓர் துறவி, ஓர் மாதகாலமாய் இணைபிரியாது கூட இருந்துவந்த உத்தண்டி நயினாரென்னும் உத்தம ரமண பக்தருடன் சுவாமிகளை அடுத்து, கோயிலில் கூட்டமிகுதியானதால் தியானத்திற் கிடையூறுகும்; குருமூர்த்தமென்னும் தான் பூஜைசெய்யும் சமாதிகோயிலுள் ஏகாந்தமாயிருத்தல் நலமெனவேண்ட அவருடன்போய் ஆங்கமர்ந்தனர். அங்கு தினந்தோறும் வந்து தரிசனம் செய்துகொண்டிருந்த சிரஸ்தார் வெங்கடராமையரெனும் அந்தணரொருவர் சுவாமிகளை ஊர் பெயர் தெரிவிக்கும்படி மன்றாடி வேண்ட "திருச்சுழியல்" என்றெழுதிக்காட்டினர். சுவாமிகள் இங்கிருப்பது மதுரை சென்றிருந்த தம்பிரான் மூலமாக சிறிய தந்தையின் செவிக்கெட்டியது. பிறகு ஓர் நாள் எறையூர் கர்ணம் சீனிவாசையர், ஐயன்குளத்தெரு விநாயகர்கோவிலில் பயறும் அரிசியும் பொங்கி உப்பில்லாது ஓர் பொழுதுண்டு தொண்டு பூண்டிருந்த அடியாரொருவரைக் கண்டு குருமூர்த்தத்தில் துருவசுவாமியெனத் தவத்தினால் பிரகாசித்துக்கொண்டிருக்கும் திருவுருவத்தை அடுத்துத்தொண்டு செய்து கொண்டிருப்பீரானால் இப்பிறவியினாலாய பயனை அடைவீர் என்று மொழிந்து செல்லவும், மலையாளம்பழனி சுவாமி என்கின்ற அப்பெரியவர் சுவாமிகளை அடுத்து கண்ணினை இமைபோற் காத்துவந்தனர். இந்த இடத்தில் வந்த

பிறகு குன்றிலிட்ட விளக்கெனப் பிரகாசித்த தவத்தொளியால் சுவாமிகளை உலகறியத் தொடங்கிற்று.

**மாந்தோப்பு:**—இக்குருமூர்த்தத்தில் ஒன்றரை வருடம் வதிந்தபின், அதற்குத் தெற்கிலுள்ள மாந்தோப்புக்குடையவர் வெங்கடராம நாயகர், தோட்டத்துள் இரண்டு ¶பரண்களின்மேல் சிறு பர்ணசாலைகளமைத்துத்தந்து ஒருவரும் உட்புகாதபடி காத்துவர, இருவரும் அதனுள் ஏகாந்தத்தில் ஆறுமாதங்கள் தியானித்திருந்தனர். இடையிலோர் நாள் சுவாமிகளின் சிறிய தந்தை நெல்லையப்பையர் வந்து அனுமதி பெற்று உட்சென்று தரிசித்து நம் சிறுவன் இளம்பிராயத்திலேயே போகங்களைத் துறந்து நிர்க்கதியாய் இக்கோலமாயினனே என்ற துக்கம் ஓர் பால், இவ்வருந்தவ ஞானியை யீன்ற நமது குலம் முற்றிலு மீடேறிற்றென்னும் களிப்போர்பால் பொங்கியெழ இரு கண்களிலும் நீர் பெருக நெடுநேரம் நிற்க, யாதொருபதிலும் உரையாதிருந்த சுவாமிகளின் அரிய மோனத்தவநிலையை உணர்ந்தவராய் இவர் திரும்பாரெனத் தீர்மானித்து ஊர் திரும்பினர்.

**பவளக்குன்றம்:**— அங்கிருந்து பவளக்குன்றையடைந்து அதன்கண்ணுள்ள குகையிலும் பிரவாளகிரிநாதர் ஆலயத்துள், காற்றுப்புகாத சிறிய அறைக்குள்ளும் நெடுநாளிருந்து ஊரினுட்சென்று வீட்டுவாசலில் நின்று மௌனத்தைவிடாமல் கைதட்டி வாசற்படி கடந்துவந்த பிக்ஷைகளை புளித்த உப்பில்லாக் கூழாயினும் உவப்புடன் அங்கையே பாத்திரமாக அமிழ்தென ஏந்தி உண்டு தவம்

---

¶பரண் - பந்தல்.

புரியு நாளில் தவத்திற்சிறந்த தாயும் தமையனும் வந்து கண்டு,

தாய்:— விருத்தம்.

☞ அறந்தாங்கு கடவுளரோ வன்றிமற்ற தேவர்கோலோ
வமைந்த வானந்
துறந்தாங்கு சுழியலொரு சுந்தரனுய்த் தோன்றியெனை
மாலை சூடி
வரந்தாங்கு மதலையொரு நால்வருமை வதுத்தும்பர்
பதமே லானன்
பரந்தாங்கு வேடத்தாற் பரிந்தனையே பாவியனேன்
புதைக்கின் றேனே.

ஓங்கிவளர் கலைமதியி னொருவனென வுலகறிய
வுலவா வன்ற
னுங்கிலத்தி னுயர்தரத்தி னாசியலைக் காணவருந்
தவமே செய்தேன்
தாங்குமுடைக் கோவணமுந் தரைவிரித்த பஞ்சணையுந்
தருவி னீழல்
வாங்கியுணும் பிச்சையுமாய் வளருமுனைக் காணவாம்
வாங்கி னேனே!

அடங்கொண்ட கைம்மாவும் வரிமாவு மரிமாவுங்
கரடி மானும்
படங்கொண்ட பாம்பிரவு பகலுலவு பருப்பதத்திற்
பயமொன் றின்றித்
திடங்கொண்டு நிற்பாயேல் தீமைபல சிறுவனீ
தறியாய் நீயென்
னுடன்கொண்டு நிற்பாயே லுனக்குரிமை பலவளித்தங்
குய்வே னெந்தாய்.

செய்யாருந் திருச்சுழியல் மேவலது தெய்வத்தாற்
றீர்ந்த தேனும்
நையாம லெனதுமன நானிருக்கு மிடத்திலுட
னண்ணு வாயேல்

---

☞ இப்பாடல்கள் நூலாசிரியரின் புனைந்துரை.

மெய்யோடு முன்பிறந்தா னிளையவனு மேவியதுந்
றேவல் செய்ய
வையாநா நால்வருமோ ரிடத்திருந்திவ் வருந்தவத்தை
யடுப்போ மென்றாள்.

இவ்வாறு பிரலாபித்து தம்மூருக்கழைத்தார்கள். அதற்கு யாதொருபதிலு முரையாததுகண்டு அச்சமயம் சுவாமிகளைத் தரிசிக்கவந்த சிலபக்தர்களும் சேர்ந்துகொண்டு காகிதமும் எழுதுகோலும் கொடுத்து எழுதியேனும் தரும்படி வேண்ட,

"அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவ ஞங்காங்கிருந் தாட்டுவிப்பன்.

என்றும்

நடவாத தென்முயற்சிக்கினு நடவாது;
நடப்ப தென்றடை செய்யினு நில்லாது;
இதுவே திண்ணம்: ஆகலின்,
மௌனமாயிருக்கை நன்று."

என்று எழுதிக்கொடுக்க ஏங்கித் தம்மூர் திரும்பினர்.

குகைவாசங்கள்:—இரு விழி அலர்ந்து இசைந்து மேல் நோக்க, பெருகி அடர் மயிர் பிடரி மேற்சரிய, குருத்து வளர்ந்து கூர்நகம் வளைவுற, மும்மதம் பொழியும் மொய்ம்மனக் களிறு, தன்வலி யடக்கிய தவராஜ சிங்கம், அண்ணாமலையின் இதயம்போன்ற குகாந்தரங்களில் வசிக்கக்கருதி கீழ்க்குகை நமச்சிவாயர் குகைகளிற் சிலகாலம் இருந்து, திருமுலைப்பால் தீர்த்தக்கரையிலிருக்கும் குளிர்ச்சி தங்கிய மாமரக்குகையிலும், அழகிய அருவிக்கரையில் பிரணவாகாரமான வட்டவடிவாய் விளங்கும் விரூபாக்ஷ குகையிலும் வேனில் மாரி காலங்களில் முறையே வசித்து வந்தனர். பிராம்மணசுவாமி மௌனமாய் மலைமேல்

தவம்புரிகின்ருர் என்பது, விண்ணிலேற்றிய காந்த விளக்கென எங்குந்தெரிய, எண்ணிறந்த அன்பர் ஆடவரும் பெண்மணிகளும் பாலர்களுமாய்க் காணவந்தவர்களாகி, சாந்தியென்னும் கவசம்பூண்டு நிராசையென்னும் உடைவாளேந்தி சுத்தமனமென்னும் மத்தயானை மீதேறி, காமாதி சதுரங்க சைனியத்துடன் இருவினைதுரகத் தேரேறி வந்தெதிர்த்த அவித்யா நகரத்தரசனுன ஆணவராஜனை நிஷ்ப்ரபஞ்ச யுத்தரங்கத்தில் மாய்த்து, வெற்றிமாலைசூடி ககாலய மண்டபத்தில் மௌன முடிசூடி அத்துவிதானந்த சுகபோத ராஜனுய் இதயகமல அரியாசனத்தில் வீற்றிருந் தரசுசெய்யும் தவப்பெருந் தகையைக்கண்டு, பலர் பலவிதம் பேசலாயினர். உயிர்ப்பற நின்ற *ஓவியத் தெழுதொணு ஒப்புயர்வில்லா ஒருபொரு ளெனுஞ்சிலர், கொற்றவேற் குமரன் கோலமி தெனுஞ்சிலர், ரகுகுல திலகன் ராமனே யெனுஞ்சிலர், ‡கமலைதன் மணுளன் கண்ணனே யெனுஞ்சிலர், மாரனைவென்ற §மாண்புரு வெனுஞ்சிலர், கலைமகள் கணவன் காந்துரு வெனுஞ்சிலர், முந்துமௌந் தவத்தின் முடிவிதுவாக சூழியல்வந் தொளிரும் சொரூபமி தெனுஞ்சிலர், இவ்வாறு, அவரவர் இஷ்டதெய்வமே இவ்வுருக்கொண்டு வந்ததெனும் கொள்கையுடையராய் பால் பழம் சிற்றுண்டிகள் கொடுத்து வணங்கிப்போவர். இந்துமதத்தினால்லாத அன்னியரும்கூட வழிபடலாயினர். ஐயனுடைய யௌவன பருவத்தில் மன்மதனும் தன்னுடைய முழுபலங்கொண்டு எண்ணற்ற நறுமண மலர்ப் பகழிகளை கருப்புவில்லிற்ருெடுத்தேவலும், நமது தவப்பெருந்தகையின் வஜ்ரகவாடம் போன்ற மார்பகத்திற்பட்டு தீயிடைப்பட்ட பஞ்சாய்ப்

---

*ஓவியம் - சித்திரம், ‡கமலை - லக்ஷ்மி, §மாண்புரு-அழகியவுருவம்.

போகக்கண்டு வெட்கத்தினால் இருக்கரந்து அகங்கனாயினன். இந்நிலையில் கர்ப்பவாசமெனப் பத்துவருடங்கள் மௌன விரதத்தை விடாது அனுஷ்டித்து, பதினோராவது ஆண்டு முதல் தன்னுடைய அநுபூதியைப் பேரருளால் உலகிற்கு உணர்த்தத் திருவுளங்கொண்டு, தீவிர மோக்ஷேச்சையுடையவர்களுக்கு வேதாகம சாஸ்திரங்களின் சாரங்களை மெலிந்த பழமைச் சொற்களாலாகிய ஸூத்ர ரூபமான இரண்டொரு வாக்கியங்களால் உபதேசிப்பாரானார்.

**கணபதிமுனி:**—விசாகப்பட்டணம் ஜில்லா பொப்பிலியைச் சேர்ந்த கலவராய் கிராமவாசியான வாஸிஷ்ட நரஸிம்ம சாஸ்திரிகளின் குமாரராய் கலி 4979 பகுதானியவருஷ கார்த்திகைமீ மகநக்ஷத்திரம் கும்ப லக்கினத்தி லுதித்து, "கணபதி" யெனத் திருநாமம்பூண்டு வளர்ந்து, தந்தையாரிடத்தில் கல்விபயின்று வடமொழியில் பண்டிதராகி, சிறுவயதிலேயே தேசசஞ்சாரஞ் செய்து நவத்வீபம் என்னும் வங்காளதேச நகரத்தின் பண்டித சபையினரால் "காவியகண்டர்" என்னும் பட்டம் சூட்டப்பெற்று, பல தலங்களிலும் தவம்புரிந்து, திருவண்ணாமலைக்கு வந்து சுவாமிகள் சன்னிதியை அடைந்து வந்தனஞ்செய்து, பிலவங்கவருஷ கார்த்திகைமீ சுவாமிகளால் தபஸ்வி னுண்மை லக்ஷணம் உபதேசிக்கப்பெற்று வடமொழியில் இருபத்தோரு சுலோகங்களால் "ரமணகவிம்சதி" என்கிற துதியும், அவராலும் இன்னும்பல சிஷ்யர்களாலும் கேழ்க்கப்பட்ட கேள்விகளுக்கு மஹர்ஷிகளின் உபதேச ரூபமான "ரமணகீதை" என்கின்ற முன்னூறு சுலோகங்கள் கொண்ட வடமொழி நூலும், உமாஸஹஸ்ரம் முதலனேக கிரந்தங்களுமியற்றி வானப்பிரஸ்தராகி இன்றும் இத்தலத்திலேயே தவமியற்றுகின்றனர்.

**சிவப்பிரகாசம்பிள்ளை:**—சிதம்பரம் தாலூகாவிற் பிறந்து ஆங்கிலத்தில், B.A.; பட்டம்பெற்று உத்தியோகம் வகித்து வைராக்கியத்தால் அனைத்தையும் துறந்து மஹர்ஷிகளின் சிஷ்யராகி, ரமண சரித்திர அகவல், அனுக்கிரக அகவல், ரமண பாதமாலை முதலிய தேனூறு செந்தமிழ்ப் பாக்களாலாகிய நூல்களை வகுத்து வானப்பிரஸ்தராய்த் தம்மூரில் தவம்புரிகின்றனர்.

**ஹம்ப்ரீஸ்:**—மேல்நாட்டிற் பிறந்து வளர்ந்த ஹம்ப்ரீஸ் என்னும் ஐரோப்பியர், மதங்களினுடைய முடிவான உண்மையை உணர்த்தவல்லது இந்தியாவைத் தவிர வேறில்லையென்றுணர்ந்து "போலீஸ் அஸிஸ்டெண்ட் ஸூப்பரிண்டெண்டெண்ட்" என்னும் உத்தியோகம் காரணமாக ராயவேலூர் வந்து "தெலுங்கு முனிஷி" நரசிம்மையரால் மஹர்ஷிகளுடைய வரலாற்றையறிந்து, 1911-ம் ௵ ஜனவரி௴ மஹர்ஷிகளிடம்வந்து இவர் அரியநிலையைக்கண்டு வியந்து உபதேசங்கொண்டு இங்கிலாந்திலுள்ள ஆங்கில பத்திரிகையில், தான்கண்ட வரலாற்றை வெளியிட, அதையே புத்தகமாக வேலூர் நரஸிம்மையர் முகவுரையுடன் வெளியிட்டுள்ளார்.

**மஸ்தான்சுவாமி:**—தேசூர் மஸ்தான் சுவாமி என்கின்ற மகம்மதியர் இந்து மதத்தில் பற்றுள்ளவராய் மஹர்ஷிகளின் அரிய சிஷ்யரானார்.

**ரமணமஹர்ஷிக**ளென்கின்ற இந்த வயதிற்சிறிய அறிவினால் அனுபவமிகுந்த ஞானக்கிழவனை, அறிவி லிளைய வயோதிகர்களெல்லாரும் வந்து வணங்கி சந்தேகம் நீங்கினவர்களாய் சிஷ்யர்களானார்கள். மேற்சொன்னவர் போன்ற

அன்னிய மதஸ்தர் அனேகர் மாணுக்கராயினர். காலையும் பகலும் கட்டளைகொண்டு புத்தடிசில் நிவேதனஞ்செய்யும் பக்திமிகுந்த பெண்மணிகள் சிலர், அமர்ந்த இடந்தோறும் ஆலயங்கட்டி வழிபடும் அன்பர் பலர்; வீடுதரும் சரண சரோருகங்களில் ஓடுங்கருத்தை யிருத்தி உண்மைக்கொண்டு பூண்டார் பலர்; தென்மொழி, வடமொழி, தெலுங்கு, *கேரளம், ஆங்கில முதலிய பாஷைகளில் தேன்பிலிற்றுஞ் சித்திரப்பாமாலை சேர்த்து சுந்தரத்தாட்களிலும் மந்தாரத் தோட்களிலும் அணிவித்து மகிழு மடியார் பலர்; மோன வாவியில்மூழ்கி மனத்தழுக்ககன்று நிராசை யென்னும் உலர்ந்த மடியுடுத்தி ஒருவரு மறியா வுயர்தனி வீட்டில் சாந்தியென்னும் பத்தினியுடன் இந்திரியப் பிராண சமிதைகளை யான் எனதென்னும் ஆஜ்ய ஹவிஸ்ஸுடன் ஞானக்கினியில் ஆகுதிசெய்து †வெகுளியைத் தானஞ்செய்து உள்ளும் புறம்பு மொன்ருய் ஊற்றெடுத்து ப்ரவகிக்கின்ற சிதாகாச கங்கையில் அவப்ருத ஸ்நாந முடித்து கர்ம பலமாகிற அவிர்ப்பாகத்தை மஹர்ஷி ரமணனுக்களித்து விளங்குகின்ற சத்யநித்தியாக்கினி ஹோத்திரிகள் பலர்; வாக்கு வடிவங் கழன்று அவனருளை புணர்ந்துணர்ந்து தன்னையு மறந்து சும்மா விருக்கின்ற ஞானயோகிகள் பலர்; இவ்வாறு அவரவர் மனத்தின் பக்குவ நிலைகளுக்கேற்ப எண்ணிறந்த அன்பர் மஹர்ஷி ரமணனை வழிபடலானர்கள். யாவராயினும் அன்புமிகுதியால் அளிக்கும் பற்பல கனி வர்க்கங்களுடன் கூடிய கள்ளுமூனுங் கலவாத சுத்தமான உண்டி சிற்றுண்டிகளை, விலங்கும் பறவையும் விருந்தின ராக, உற்றூர் பலரும் ஒன்றுபோற் பகுத்துண்பது ஆச்சிரமப்பழக்கம். முத்திரை மோன முடிவினில் நின்று தண்டம்

*கேரளம் - மலையாளம், †வெகுளி - கோபம்.

கமண்டலம், *சரட்டை, குடுக்கை முதலிய பொருள்களை அடியாருடன் கலந்து அழகுற அமைப்பதும், தனித்தும் அன்பர் சூழவும் முறைப்படி சிற்சில சமயங்களில் கிரிவலஞ்செய்வதும் உண்டு. திருவண்ணாமலையில் ப்ளேக் என்னும் மகாமாரி நோய் பரவி ஊர் காலியாயிருந்த பொழுது பச்சையம்மன் கோயிலில் தங்கியிருந்து மீண்டும் முன்னிருந்த குகைகளில் வசித்து வந்தனர். தர்க்கபாஸ்கரன், வேதாந்தகேசரி, பிரதிவாதி பயங்கரன் என்பது போன்ற பட்டங்களைத்தாங்கிய பண்டித மதயானைகள், தங்களுடைய யுக்தி வாதங்களால் வெற்றிபெறவெண்ணி மலையேறி சிங்கவேறனைய மஹர்ஷிகளின் சன்னிதி யடைந்த மாத்திரத்தில் மதமடங்கி யாதொரு சங்கற்பமு மெழாதவராகி நீண்ட நேரம் சும்மாவிருந்து திரும்புவர். முமுக்ஷுக்கள் பலரும் அவ்வாறே, "நம்முடைய சந்தேகங்க ளெல்லாம் இன்றே கேட்டுத் தெளியலா" மென்றெண்ணி சன்னிதி யடைந்து சந்தேக மொன்றுந் தோன்றாதவராகி நெடுநேரம் தூங்காமல் தூங்கி யிருந்து சந்தேகிக்கின்றவனைத் தெளிந்து செல்வர். இவ்விதமாகப் பத்து வருடங்களும், முன் மௌனத்தில் பத்து வருடங்களும் ஆக இருபது வருடங்கள் சென்றன.

**தேவி அழகம்மையார்:—** தன் திருக்குமாரன் அழகிய பெரும் புகழைக்கேட்டு ஈன்றபொழுதிற் பெரிதும் உவந்த திருத்தாய் தேவி அழகம்மையார், **விரூபாக்ஷகுகை**யில் மஹர்ஷிகளின் சன்னிதியடைந்து துக்கித்தவராய் இவ்வாறு ப்ரலாபித்தனர். "தர்மதேவதையே ஒருருக்கொண்டு வந்ததென உயர்ந்த உத்தமகுணங்கள் வாய்ந்த உன் தந்தை சத்தியபக்தையும், கீர்த்தியையும் உலகில் நிலைபெறச்செய்து

---

*சரட்டை—தேங்காய்ஓடு.

இளம்பிராயத்தினரான உங்களையும் என்னையும் அனுதாவாக்கி அருந்தவசிகளுக்குங் கிடைத்தற்கரிய சத்தியலோகத்தை அடைந்தார்; பிறகு என்னை ஆதரித்துவந்த உன் தமையன் நாகசாமியும் என்னைத்தனித்துத் தவிக்கவிட்டு இளம்பருவத்திலேயே தந்தையினடிச்சுவட்டைப் பற்றித் தானு மவ்வழியே போனான்; உன் இளைய சகோதரன் நாகசுந்தரத்தினுடைய மனைவியும் பதிவிரதைகளாலடையத்தகுந்த உத்தமகதியையடைந்தனள்; எனக்குள்ள ஆதரவுகளனைத்தும் ஒவ்வொன்றாய்க் கழன்றுபோயின; இனி உன்னைத் தவிர எனக்கு வேறு கதியில்லை; கபடமறியாத உன் இளைய சகோதரனையும் கைவிடக்கூடாது; இனி நான் உங்களிருவருடனுமிருந்து வாழ்நாளை ஓரிடத்திற் கழிக்கவும் §நிரியாணகாலத்தில் ஒரு துளி பால் வார்த்து உன் திருக்கரத்தால் இந்த உடலை அடக்கஞ் செய்யவும் பாக்கியம் பெற்றேனே யாகில் இனிப்பிறவாப் பெரும் பேற்றை அடைவேன்; இந்த வரங்களை எனக்குத்தந்தருளல்வேண்டும்" என்று கவலையுடன் பிரார்த்தித்துநின்ற தனதருமைத் தாயின் வேண்டுகோளுக்கிரங்கி அனுக்கிரகசித்தாய் நீண்டநேரம் தியானித்து மௌனமாக விருந்தனர். பிறகு அவ்வம்மையார் துறவு பூண்டு காஷாய வஸ்திரதாரிணியாய் ரமணாச்சிரமத்திலேயேவசித்துவந்தார்கள்.

### விருத்தம்.

பொறுமைக்கும் பொறுமை யீயும் புண்ணியன்
புவிமுன் றிந்த
மிருமைக்கு மிருமை யாய வேழிலவன்
றன்னைக் கொண்ட
கருவுக்குங் கருவாய் நின்ற காரணி
துணத்தைக் கூற
லருமைக்கு மருமை யென்றே யறைந்திட
லதிக மன்றே.

---

§நிரியாணம்—மரணம்.

(இதன்பொருள்) மூவுலகத்துயிர்கட்கும், இம்மை மறுமை என்னு மிரண்டிற்கும் இம்மை மறுமையைத் தனது சுவரூபமாகக் கொண்டவனாய், சாந்திக்கும் சாந்தியைத்தரு கின்ற அழகு வாய்ந்தவ (ரமண)னை கருப்பத்திற்றாங்குவதற் குக் காரணமான சரீரத்தையுடைய காரணி(அழகம்மை) யின் குணங்களைச் சொல்லுதல் அரிதினுமரிதென்றுகூறுதல் மிகையாகாது.

இவ்வம்மையார், ஊற்றுநீர் போற்சுரந்து தெளிந்து அன்பார்ந்த பரிசுத்தமான உள்ளமும், அமிழ்தினுமினிய சுவையுறச்சமைத்து அன்பர்க்களிக்கு மாதரவும், கரும்பினு மினிய வேதாந்தப் பாடல்களால் அன்பர்களிதயத்தைக் களிக்கச் செய்கின்ற ஞானகுணமும் வாய்ந்த தபஸ்வினி. சுருங்கச்சொல்லின் இவ்வம்மையார் வந்தபிறகு தவச்சாலை யானது இடையறா அன்னதானஞ்செய்யும் வேள்விச்சா லையாகமாறியது.

**சின்னஸ்வாமிகள்:**— இவ்வன்னையின் இளையகுமா ரர் நாகசுந்தரமையர் தம் அருமைத்தாயின் பிரிவைச் சகி யாதவராய், தாயைத்தேடிய கன்றென வந்து மஹர்ஷிகளை யும் அன்னையையும் வணங்கி துறவு கோலம் பூண்டு **நிரஞ் சனஸ்வாமிகள்** (சின்னஸ்வாமிகள்) என்னும் ஆச்சிரமப் பெயர்பூண்டு தமதன்னையின் சமீபத்தில் வசிக்கலானார். மாதா பிதா குரு தெய்வம் அனைத்தும் அன்னையேயெனு மன்புபூண்ட இவ்வுத்தமர் அன்னையிடத்தில் வைத்திருக்கும் உள்ளன்பும், அரியசேவையும், *இலக்குவன்போன்று தமை யனிடங்கொண்டுள்ள பக்தியும் உலகினுக்கோர் ||சான்றாகும்.

---

*இலக்குவன்-லக்ஷ்மணன், ||சான்று—உதாரணம்.

**கந்தாச்சிரமம்**:—மஹர்ஷிகள், விருபாக்ஷ குகைக்கு மேல்பாகத்தில் தெள்ளிய அருவி நீர்ச்சுனையுடன் சோலை சூழ்ந்த கந்தாச்சிரமத்தில் பக்தர்களால் சுண்ணச்சாந்தால் அழகுறவமைக்கப்பெற்ற தவச்சாலையில் நள வருஷ வைகாசிமீ தத்தில் எழுந்தருளி பக்தர்களுடன் அமர்ந்தனர். சுவாமிகளுடன்கூடி இருபது வருடகாலமாய்க் கொண்டு பூண்டுஉயிரை உடலெனக்காத்திருந்தபழனிசுவாமி என்னும் பெரியவர் சிலமாதங்களுக்குப் பிறகு சுவாமிகளின் திருவடி நீழலை யடைந்து சமாதி சித்தரானார்.

**அம்மையாரின் ஐக்யம்**:—ஆறுவருடங்களுக்குப் பிறகு துந்துபிவருஷ வைகாசிமீ 6வ. (19-5-22) சுக்கிரவாரம் கிருஷ்ணபக்ஷம் நவமி சதய நக்ஷத்திரத்தில் ஞானவதி அழகம்மையாரின் அலர்ந்த இதயாரவிந்தத் ததமர்ந்த ஜீவனானது பகவந்நாமஸங்கீர்த்தன கோஷ சகித மஹர்ஷி ரமண கரகமல ஸஞ்ஜாத ஞானகங்காப்ரவாகத்தூடேசென்று அருணாசலேசுவர நிஸ்தரங்க க்ருபாஸ்வரூப ஸாகரத்திற் கலந்து கரைந்தது.

**மாத்ருபூதேசராலயம்**:—மறுநாட் காலை மஹர்ஷிகளின் அம்மையாரது உடற்கோயிலை அக்கினிதீர்த்தத்தருகில் பாலிதீர்த்தக் கரையில் சங்க தாள மிருதங்க வாத்திய கோஷங்களுடன் கூடிய பகவந்நாம ஸங்கீர்த்தனங்களுக்கிடையில் அன்பர்கள் அபிஷேக ஆராதனங்களுடன் சமாதி வைத்து அதன்மீது லிங்கப்ரதிஷ்டை செய்து "மாத்ருபூதேசர்" என்த்திருநாமமிட்டு ப்ரதிதினம் இரண்டுகாலமும் பக்தியுடன் அபிடேக ஆராதனம் செய்துவருகின்றனர்.

**ரமணாச்ரமம்**:—மஹர்ஷிகள் அவ்விடத்தில் அமர்ந்தருளி இன்றும் பக்தர்களை அனுக்கிரகித்துக்கொண்டிருக்

கின்றனர். ஓரிரவில் இந்த ஆச்ரமத்துள் கள்வர்புகுந்து பெரியாரைத் துன்புறுத்தலென்னுந் தீக்கரும பலத்தினையே கைக்கொண்டு அரசாங்க நீதிமன்றத்தில் தண்டனை யடைந்தனர். ஆண்டுதோறும் இவ்வாலயத்தில் மாத்ருபூதேசுவர ஸ்வாமிக்கு **வைகாசிமீ கிருஷ்ணபக்ஷம் நவமியில்** ஆராதனை மகோத்ஸவமும், **மார்கழிமீ புனர்பூச நக்ஷத்திரத்தில் மஹர்ஷி ரமண ஜயந்தி** என்கிற மங்களோத்ஸவமும் பக்தர்களால் இங்கு (ரமணாச்ரமத்தில்) கொண்டாடப் படுகின்றன.

## ¶ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் அருளிச்செய்தவை.

### தமிழ் நூல்கள்.

1 **அருணாசலஸ்துதிபஞ்சகம்** (அக்ஷரமணமாலை, பஞ்சரத்தினம், அஷ்டகம், பதிகம், பஞ்சகம் அடங்கியது).

2 **விவேகசூடாமணி** வசனம் (தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம், திருக்குதிருசியவிவேகம், அத்தாமலகம், குருஸ்துதி முதலியன அடங்கியது).

3 **தேவிகாலோத்தரம்** (ஞானாசார விசாரபடலம்) வெண்பா.

4 **உபதேசமொழிகள்** (நானார், உபதேச வுந்தியார், ஆன்மவித்தை அடங்கியன).

---

¶இப்புத்தகங்கள் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயத்தில் கிடைக்கும்.

## வடமொழி நூல்கள்.

5 *ரமணகீதை (அருணாசல பஞ்சரத்தினம் அடங்கியது).

6 †உபதேசசாரம்.

7 †ஷை (தெலுங்கு).

8 †ஷை (கேரளம்).

வாழ்க செங்கிரி மாரம ணன்கதை
யூழ்க டந்திட வோதியு ணர்ந்தவ
ராழ்க ருத்துள டங்கிட வான்பெற
வேழ்க டற்புவி யின்புற சோபனம்.

## ஸ்ரீ மஹர்ஷி ரமண சரிதம் சம்பூர்ணம்.

*இந்நூல் வரலாற்றை 18-ம் பக்கம் பார்க்க.

†இவை தமிழ் உபதேச வுந்தியாரின் மொழிபெயர்ப்புகள்.

உ

## சரிதத்தில் 3-ம் பக்கம் குறிப்பிடப் பெற்ற கோவையும் பதிகமும்.

# மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச் செய்த

திருச்சிற்றம்பலக் கோவையார்.

---

அன்புடை நெஞ்சத் திவள்பே துறவம் பலத்தடியா
ரென்பிடை வந்தமிழ் தூறநின் ளூடி யிருஞ்சுழியற்
றன்பெடை ணையத் தகவழிந் தன்னஞ் சலஞ்சலத்தின்
வன்பெடை மேற்றுயி லும்வய லூரன் வரம்பிலனே.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச் செய்த

தேவாரப் பதிகம்.

திருச்சுழியல்.

பண். நட்டராகம்.

---

1 ஊனுயுயிர் புகலாயக விடமாய்முகில் பொழியும்
வானுய்வரு மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
றேனுதரித் திசைவண்டின மிழற்றுந்திருச் சுழிய
ஞானவித நினைவார்தமை நலியார்நமன் றமரே.

2 தண்டேர்மழுப் படையான்மழ விடையானெழு கடனஞ்
சுண்டேபுர மெரியச்சிலை வளைத்தானிமை யவர்க்காத்
திண்டேர்மிசை நின்றானவ னுறையுந்திருச் சுழியற்
றொண்டேசெய வல்லாரவர் நல்லார்துய ரிலரே.

3 கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியற்
றெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவா
ரவ்வத்திசைக் கரசாகுவ ரலாள்பிரி யாளே.

4 மலையான்மகண் மடமாதிட மாகத்தவண் மற்றுக்
கொலையானையி னுரிபோர்த்தவெம் பெருமான்றிருச் சுழிய
லலையார்சடை யுடையானடி தொழுவார்பழு துள்ளம்
நிலையார்திகழ் புகழானெடு வானத்துயர் வாரே.

5 உற்றானமக் குயரும்மதிச் சடையான்புல னைந்துஞ்
செற்றார்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல்
பெற்றானினி துறையத்திறம் பாமைத்திரு நாமங்
கற்றாரவர் கதியுட்செல்வ ரேத்தும்மது கடனே.

6 மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியானமர்ந் திடமாந்திருச் சுழிய
னிலந்தாங்கிய மலராற்கொழும் புகையானினைந் தேத்துந்
தலந்தாங்கிய புகழான்மிகு தவமாஞ்சது ராமே.

7 சைவத்தசெவ் வுருவன்றிரு நீற்றன்னுரு மேற்றன்
கைவைத்தொரு சிலையாலரண் மூன்றும்மெரி செய்தான்
றெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்றிருச் சுழியன்
மெய்வைத்தடி நினைவார்வினை தீர்தல்லெளி தன்றே.

8 பூவேந்திய பீடத்தவன் றானும்மட லரியுங்
கோவேந்திய வினையத்தொடு குறுகப்புக லறியார்
சேவேந்திய கொடியானவ னுறையுந்திருச் சுழியன்
மாவேந்திய கரத்தானெம சிரத்தான்றன தடியே.

9 கொண்டாடுதல் புரியாவரு தக்கன்பெரு வேள்வி
செண்டாடுதல் புரிந்தான்றிருச் சுழியற்பெரு மானைக்
குண்டாடிய சமணாதர்கள் குடைச்சாக்கிய ரறியா
மிண்டாடிய வதுசெய்தது வானல்வரு விதியே.

10 நீரூர்தரு நிமலன்றிரு மலையார்க்கய லருகே
தேரூர்தரு மரக்கன்சிர நெரித்தான்றிருச் சுழியல்
பேரூரென வுறைவானடி பெயர்நாவலர் கோமா
னாரூரன தமிழ்மாலைபத் தறிவார்துய ரிலரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் திருமேனிநாதர்;

அம்மன் பெயர் துணைமாலைநாயகி.

# உபதேச மொழிகள்.

## *நானார்.

சகல ஜீவர்களும் துக்கமென்பதின்றி எப்போதும் சுகமாயிருக்க விரும்புவதாலும், யாவருக்கும் தன்னிடத்திலேயே பரம பிரியமிருப்பதாலும், பிரியத்திற்கு சுகமே காரணமாதலாலும், மனமற்ற நித்திரையில் தினமனுபவிக்கும் தன் சுபாவமான அச்சுகத்தையடையத் தன்னைத் தானறிதல்வேண்டும். அதற்கு **நானார்? என்னும் ஞானவிசாரமே முக்கிய சாதனம்.**

**நானார்?** சப்த தாதுக்களாலாகிய ஸ்தூலதேகம் நானன்று. சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தமென்னும் பஞ்ச விஷயங்களையும் தனித்தனியே அறிகின்ற சுரோத்திரம், துவக்கு, சக்ஷுஸ், ஜிஹ்வை, கிராணமென்கிற ஞானேந்திரியங்களைந்தும் நானன்று. வசனம், கமனம், தானம், மலவிசர்ஜனம், ஆனந்தித்தல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்கின்ற வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்னும் கன்மேந்திரியங்களைந்தும் நானன்று. சுவாஸாதி ஐந்தொழில்களையும் செய்கின்ற பிராணாதி பஞ்சவாயுக்களும் நானன்று. நினைக்கின்ற மனமும் நானன்று. சர்வ விஷயங்களும் சர்வ தொழில்களுமற்று, விஷயவாசனைகளுடன் மாத்திரம் பொருந்தியிருக்கும் அஞ்ஞானமும் நானன்று. மேற்சொல்லியயாவும் நானல்ல நானல்லவென்று நேதிசெய்து தனித்துநிற்கும்

*இது ஸ்வாமிகளுடன் சம்பாஷணை வாயிலாக கிரகிக்கப்பட்டது.

**அறிவே நான். அறிவின் சொரூபம் சச்சிதானந்தம்.**

சர்வ அறிவிற்கும் சர்வதொழிற்குங் காரணமாகிய மனமடங்கினால் ஜகதிருஷ்டி நீங்கும். கற்பித ஸர்ப்ப ஞானம் போனாலொழிய, அதிஷ்டான ரஜ்ஜு ஞானம் உண்டாகாதது போல, கற்பிதமான ஜகதிருஷ்டி நீங்கினாலொழிய அதிஷ்டான சொரூப தர்சனமுண்டாகாது.

மனமென்பது ஆத்மசொரூபத்திலுள்ள ஓர் அதிசய சக்தி. அது சகல நினைவுகளையும் தோற்றுவிக்கின்றது. நினைவுகளையெல்லாம் நீக்கிப் பார்க்கின்றபோது, தனியாய் மனமென்றோர் பொருளில்லை; ஆகையால் நினைவே மனதின் சொரூபம். நினைவுகளைத் தவிர்த்து, ஜகமென்றோர் பொருள் அன்னியமாயில்லை. தூக்கத்தில் நினைவுகளில்லை, ஜகமுமில்லை ஜாக்ர சொப்பனங்களில் நினைவுகளுள, ஜகமும் உண்டு. சிலந்திப்பூச்சி எப்படித் தன்னிடமிருந்து வெளியில் நூலை நூற்று மறுபடியும் தன்னுள் இழுத்துக்கொள்ளுகிறதோ, அப்படியே மனமும் தன்னிடத்திலிருந்து ஜகத்தைத் தோற்றுவித்து மறுபடியும் தன்னிடமே ஒடுக்கிக்கொள்ளுகிறது. மனம் ஆத்மசொரூபத்தினின்று வெளிப்படும்போது ஜகம் தோன்றும்; ஆகையால் ஜகம் தோன்றும்போது சொரூபம் தோன்றாது. சொரூபம் தோன்றும் (பிரகாசிக்கும்) போது ஜகம் தோன்றாது. மனதின் சொரூபத்தை விசாரித்துக் கொண்டேபோனால் "தானே" மனமாய் முடியும். தானென்பது ஆத்ம சொரூபமே. மனம் எப்போதும் ஒரு ஸ்தூலத்தையனுசரித்தேநிற்கும்; தனியாய் நில்லாது. மனமே சூக்ஷ்ம சரீர மென்றும் ஜீவனென்றும் சொல்லப்படுகிறது.

இந்த தேகத்தில் நான் என்று கிளம்புவதெதுவோ அஃதே மனமாம். நானென்கிற நினைவு தேகத்தில் முதலில் எந்தவிடத்திற் றோன்றுகின்றதென்று விசாரித்தால், ஹ்ருதயத்திலென்று தெரியவரும். அதுவே மனதின் பிறப்பிடம். நான், நான் என்று கருதிக்கொண்டிருந்தாலுங்கூட அவ்விடத்திற் கொண்டுபோய் விட்டுவிடும். மனதில் தோன்றும் நினைவுகளெல்லாவற்றிற்கும் நானேன்னும் நினைவே முதல்நினைவு. இது எழுந்தபிறகே ஏனைய நினைவுகள் எழுகின்றன. தன்மை தோன்றியபிறகே முன்னிலை படர்க்கைகள் தோன்றுகின்றன. தன்மையின்றி முன்னிலை படர்க்கைகளிரா.

நானென்னும் விசாரணையினாலேயே மனமடங்கும். நானென்னும் நினைவு மற்ற நினைவுகளையெல்லாமழித்துப் பிணஞ்சுடு தடிபோல் முடிவில் தானுமழியும். பிறவெண்ணங்களெழுந்தாலவற்றைப் பூர்த்திபண்ணுவதற்கு எத்தனியாமல் அவை யாருக்குண்டாயின? என்று விசாரிக்கவேண்டும். எத்தனை எண்ணங்களெழினுமென்ன? ஜாக்கிரதையாய் ஒவ்வோரெண்ணமும் கிளம்பும்போதே, இது யாருக்குண்டாயிற்று என்று விசாரித்தால் எனக்கென்று தோன்றும். நானார்? என்று விசாரித்தால் மனம் தன் பிறப்பிடத்திற்குத் திருப்பிவிடும். எழுந்தவெண்ணமு மடங்கிவிடும். இப்படிப் பழகப் பழக மனதிற்குத் தன் பிறப்பிடத்திற் றங்கிநிற்கும் சக்தி யதிகரிக்கின்றது. சூக்ஷ்மமான மனம், மூளை இந்திரியங்கள் வாயிலாய் வெளிப்படும்போது ஸ்தூலமான நாம ரூபங்கள் தோன்றுகின்றன. ஹ்ருதயத்தில் தங்கும்போது நாமரூபங்கள் மறைகின்றன. மனத்தை வெளிவிடாமல் ஹ்ருதயத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்குத்தான் அகமுகம் அல்லது அந்தர்முகம் என்று பெயர். ஹ்ருதயத்திலிருந்து வெளி

விடுவதற்குத்தான் பகிர்முகமென்று பெயர். இவ்விதமாக மனம் ஹ்ருதயத்திற்றங்கவே, எல்லா நினைவுகளுக்கும் மூல மான நான் என்பது போய் எப்பொழுது முள்ள தான் மாத்திரம் விளங்கும். நான் என்னும் நினைவு கிஞ்சித்து மில்லாவிடமே சொரூபமாகும். அதுவே மௌனமெனப் படும். இவ்வாறு சும்மாவிருப்பதற்குத்தான் ஞானதிருஷ்டி யென்று பெயர். சும்மாவிருப்பதாவது மனத்தை ஆன்ம சொரூபத்தில் லயிக்கச்செய்வதே. அன்றி, பிறர்கருத்தறி தல், முக்கால முணர்தல், தூரதேசத்தில் நடப்பனவறிதல் ஆகிய இவை ஞானதிருஷ்டியாகமாட்டா.

யதார்த்தமாயுள்ளது ஆத்மசொரூப மொன்றே. ஜக, ஜீவ, ஈச்வரர்கள் "சிப்பியில் வெள்ளி" போலத்திற் கற்பனை கள். இவை மூன்றும் ஏககாலத்திற் றோன்றி ஏககாலத்தில் மறைகின்றன. சொரூபமே ஜகம், சொரூபமே நான், சொரூ பமே ஈச்வரன், எல்லாம் சிவ சொரூபமாம்.

மனமடங்குவதற்கு விசாரணையைத்தவிர வேறு தகுந்த உபாயங்களில்லை. மற்ற உபாயங்களினலடக்கினல், மன மடங்கினற்போலிருந்து மறுபடியும் கிளம்பிவிடும். பிராணு யாமத்தாலும் மனமடங்கும். ஆனல் பிராணனடங்கியிருக் கும் வரையில், மனமுமடங்கியிருந்து பிராணன் வெளிப்படும் போது தானும் வெளிப்பட்டு வாசனை வயத்தாயலையும். மனத்திற்கும் பிராணனுக்கும் பிறப்பிடமொன்றே. நினைவே மனத்தின்சொரூபம், நானென்னும் நினைவே மனத்தின் முதல் நினைவு; அதுவே யகங்காரம். அகங்கார மெங்கிருந்து உற்பத்தியோ, அங்கிருந்துதான் மூச்சும் கிளம்புகின்றது. ஆகையால் மனமடங்கும்போது பிராணனும், பிராணனடங் கும்போது மனமுமடங்கும். பிராணன் மனத்தின் ஸ்தூல

ரூபமெனப்படும். மரணகாலம் வரையில் மனம் பிராணனை உடலில் வைத்துக்கொண்டிருந்து, உடல் மரிக்குங்காலத்தில் அதனைக்கவர்ந்துகொண்டு போகின்றது. ஆகையால் பிராணாயாமம் மனத்தை யடக்க சகாயமாகுமேயன்றி மனோநாசஞ்செய்யாது.

பிராணாயாமம் போலவே மூர்த்தி தியானம், மந்திர ஜபம், ஆகாரநியமமென்பவைகளும் மனத்தையடக்கும் சகாயங்களே. மூர்த்தி தியானத்தாலும், மந்திர ஜபத்தாலும் மனம் ஏகாக்கிரத்தையடைகிறது. சதா சலித்துக்கொண்டிருக்கும் யானையின் துதிக்கையில் ஒரு சங்கிலியைக்கொடுத்தால் அவ் யானை எப்படி வேறொன்றையும் பற்ருமல் லதையே பற்றிக்கொண்டு செல்லுமோ, அப்படியே சதா சலித்துக்கொண்டிருக்கும் மனமும், அதனை ஏதோ ஒரு நாமம் அல்லது ரூபத்திற் பழக்கினல் அதையே பற்றிக்கொண்டிருக்கும். மனமளவிறந்த நினைவுகளாய் விரிகின்றபடியால் ஒவ்வொரு நினைவும் அதிபலவீனமாகப் போகின்றது. நினைவுக ளடங்கவடங்க ஏகாக்கிரத்தன்மையடைந்து, அதனல் பலத்தை யடைந்த மனத்திற்கு ஆத்ம விசாரம் சுலபமாய் சித்திக்கும். எல்லா நியமங்களிலுஞ் சிறந்த மித ஸாத்விக ஆகார நியமத்தால் மனத்தின் ஸத்வ குணம் விருத்தியாகி, ஆத்ம விசாரத்திற்கு சகாயமுண்டாகிறது.

தொன்றுதொட்டு வருகின்ற விஷயவாசனைகள் அளவற்றனவாய்க் கடலலைகள்போற் றேன்றினு மவையாவும் சொரூபத்யானம் கிளம்பக் கிளம்ப அழிந்துவிடும். அத்தனை வாசனைகளுமொடுங்கி, சொரூபமாத்திரமாயிருக்க முடியுமாவென்னும் சந்தேகநினைவுக்கு மிடங்கொடாமல், சொரூ

பத்யானத்தை விடாப்பிடியாய்ப் பிடிக்கவேண்டும். ஒருவன் எவ்வளவு பாபியாயிருந்தாலும், நான் பாபியாயிருக்கிறேனே எப்படிக் கடைத்தேறப் போகிறேனென்றேங்கி யழுது கொண்டிராமல் தான் பாபி என்னு மெண்ணத்தையு மறவே யொழித்து சொரூபத்யானத்தி லூக்க முள்ளவனாக விருந்தால் அவன் நிச்சயமாய் உருப்படுவான்.

மனத்தின்கண் எதுவரையில் விஷய வாசனைகளிருக்கின்றனவோ, அதுவரையில் நானுரென்னும் விசாரணையும் வேண்டும். நினைவுகள் தோன்றத் தோன்ற அப்போதைக்கப்போதே அவைகளையெல்லாம் உற்பத்திஸ்தானத்திலேயே விசாரணையால் நசிப்பிக்கவேண்டும். அன்னியத்தை நாடாதிருத்தல் வைராக்கியம் அல்லது நிராசை. தன்னை விடாதிருத்தல் ஞானம். உண்மையி லிரண்டு மொன்றே. முத்துக்குளிப்போர் தம்மிடையிற் கல்லைக் கட்டிக்கொண்டு மூழ்கிக் கடலடியிற் கிடைக்கும் முத்தை எப்படி யெடுக்கிறார்களோ, அப்படியே ஒவ்வொருவனும் வைராக்கியத்துடன் தன்னுள்ளாழ்ந்து மூழ்கி ஆத்மமுத்தை யடையலாம். ஒருவன் தான் சொரூபத்தை யடையும் வரையில், நிரந்தர சொரூப ஸ்மரணையைக் கைப்பற்றுவானாயின் அதுவொன்றே போதும். கோட்டைக்குள் எதிரிகளுள்ளவரையில் அதிலிருந்து வெளியே வந்துகொண்டேயிருப்பார்கள். வர வர அவர்களையெல்லாம் வெட்டிக்கொண்டே யிருந்தால் கோட்டை கைவசப்படும்.

கடவுளும் குருவும் உண்மையில் வேறல்லர். புலி வாயிற்பட்டது எவ்வாறு திரும்பாதோ, அவ்வாறே குருவினருட் பார்வையிற் பட்டவர்கள் அவரால் ரக்ஷிக்கப்படுவரே யன்றி யொருக்காலும் கைவிடப்படார். எனினும் குரு காட்டிய வழிப்படி தவறாது நடக்கவேண்டும்.

ஆன்ம சிந்தனையைத் தவிர வேறு சிந்தனை கிளம்புவதற்குச் சற்றுமிடங்கொடாமல் ஆத்ம நிஷ்டாபரனா யிருப்பதே தன்னை ஈசனுக்களிப்பதாம். ஈசன் பேரில் எவ்வளவு பாரத்தைப் போட்டாலும், அவ்வளவையும் அவர் வகித்துக் கொள்ளுகிறார். சகல காரியங்களையும் ஒரு பரமேச்வரசக்தி நடத்திக்கொண் டிருக்கிறபடியால், நாமுமதற் கடங்கியிராமல், இப்படிச் செய்யவேண்டும் அப்படிச் செய்யவேண்டுமென்று ஸதா சிந்திப்பதேன்? புகைவண்டி சகல பாரங்களையும் தாங்கிக் கொண்டுபோவது தெரிந்திருந்தும், அதிலேறிக்கொண்டுபோகும் நாம் நம்முடைய சிறிய மூட்டையையு மதிற் போட்டுவிட்டு சுகமாயிராமல் அதை நமது தலையிற்றூங்கிக் கொண்டு என் கஷ்டப்படவேண்டும்?

சுகமென்பது ஆத்மாவின் சொரூபமே. சுகமும் ஆத்மசொரூபமும் வேறன்று. ஆத்மசுகம் ஒன்றேயுள்ளது. அதுவே ஸத்யம். ப்ரபஞ்சப் பொருள் ஒன்றிலாவது சுகமென்பது கிடையாது. அவைகளிலிருந்து சுகம் கிடைப்பதாக நாம் நமது அவிவேகத்தால் நினைக்கின்றோம். மனம் வெளியில் வரும்போது துக்கத்தை யனுபவிக்கிறது. உண்மையில் நமது எண்ணங்கள் பூர்த்தியாகும் போதெல்லாம் அது தன்னுடைய யதாஸ்தானத்திற்குத் திரும்பி ஆத்மசுகத்தையே அனுபவிக்கிறது. அப்படியே தூக்கம், சமாதி, மூர்ச்சை காலங்களிலும், இச்சித்த பொருள் கிடைக்கிற போதும், வெறுத்த பொருளுக்குக் கேடுண்டாகும் போதும் மனம் அந்தர்முகமாகி ஆத்மசுகத்தையே அனுபவிக்கிறது. இப்படி மனம் ஆத்மாவை விட்டு வெளியே போவதும், உள்ளே திரும்புவதுமாக ஓய்வின்றி யலைகிறது. மரத்தடியில் நிழல் சுகமாயிருக்கிறது. வெளியில் சூரிய வெப்பம் கொடுமையா யிருக்கிறது. வெளி

யிலேயுமொருவன் நிழலிற் சென்று குளிர்ச்சியடைகிருன். சிறிது நேரத்திற்குப்பின் வெளிக்கிளம்பி வெப்பத்தின் கொடுமைக்காற்ருது, மறுபடியும் மரத்தடிக்கு வருகின்ருன். இவ்வாறு நிழலினின்று வெயிலிற் போவதும், வெயிலினின்று நிழலிற் செல்வதுமா யிருக்கிருன். இப்படிச் செய்கிறவன் அவிவேகி. ஆனல் விவேகியோ நிழலைவிட்டு நீங்கான். அப்படியே ஞானியின் மனமும் பிரம்மத்தைவிட்டு நீங்குவதில்லை. ஆனல் அஞ்ஞானியின் மனமோ பிரபஞ்சத்திலுழன்று துக்கப்படுவதும் சிறிது நேரம் பிரம்மத்திற்குத்திருப்பி சுகமடைவதுமாயிருக்கிறது. ஜகமென்பது நினைவே. ஜகம் மறையும்போது அதாவது நினைவற்றபோது மனம் ஆனந்தத்தை யனுபவிக்கின்றது. ஜகம் தோன்றும்போது அது துக்கத்தை யனுபவிக்கின்றது.

இச்சா ஸங்கல்ப யத்னமின்றி எழுந்த ஆதித்தன் சன்னிதி மாத்திரத்தில் காந்தக்கல் அக்கினியைக் கக்குவதும், தாமரை யலர்வதும், நீர் வற்றுவதும், உலகோர் தத்தம் காரியங்களிற் பிரவர்த்தித்து இயற்றி யடங்குவதும், காந்தத்தின் முன் ஊசி சேஷ்டிப்பதும் போல, ஸங்கல்ப ரகிதரா யிருக்கும் ஈசன் சன்னிதான விசேஷ மாத்திரத்தால் நடக்கும் முத்தொழில் அல்லது பஞ்ச கிருத்தியங்கட் குட்பட்ட ஜீவர்கள் தத்தம் கர்மானுசாரம் சேஷ்டித் தடங்குகின்றனர். அன்றி அவர் ஸங்கல்ப ஸகிதரல்லர்; ஒரு கருமமு மவரை யொட்டாது. அது லோக கருமங்கள் சூரியனை யொட்டாததும், ஏனைய சதுர்பூதங்களின் குணகுணங்கள் வியாபகமான ஆகாயத்தை யொட்டாததும் போலும்.

எந்நூலிலும் முக்தி யடைவதற்கு மனத்தை யடக்க வேண்டு மென்று சொல்லப்பட் டுள்ளபடியால் மனோ

நிக்ரகமே நூல்களின் முடிவான கருத்து என்றறிந்து கொண்டபின்பு நூல்களை யளவின்றிப் படிப்பதாற் பயனில்லை. மனத்தை யடக்குவதற்குத் தன்னை யாரென்று விசாரிக்க வேண்டுமே யல்லாமல் எப்படி நூல்களில் விசாரிப்பது? தன்னைத் தன்னுடைய ஞானக் கண்ணாற்றானே யறியவேண்டும். ராமன் தன்னை ராமனென்றறியக் கண்ணாடி வேண்டுமா? "தான்" பஞ்ச கோசங்களுக் குள்ளிருப்பது. நூல்களோ அவற்றிற்கு வெளியிலிருப்பவை. ஆகையால் பஞ்ச கோசங்களையும் நீக்கி விசாரிக்க வேண்டிய தன்னை நூல்களில் விசாரிப்பது வீணே. பந்தத்திலிருக்கும் தான் யாரென்று விசாரித்து தன் யதார்த்த சொரூபத்தைத் தெரிந்து கொள்வதே முக்தி. சதாகாலமும் மனத்தை ஆத்மாவில் வைத்திருப்பதற்குத் தான் ஆத்ம விசார மென்று பெயர். தியானமோ தன்னை ஸச்சிதானந்த பிரம்மமாக பாவிப்பது. கற்றவை யனைத்தையும் ஒருகாலத்தில் மறக்க வேண்டி வரும்.

குப்பையைக் கூட்டித் தள்ளவேண்டிய ஒருவன் அதை யாராய்வதா லெப்படிப் பயனில்லையோ அப்படியே தன்னை யறியவேண்டிய ஒருவன் தன்னை மறைத்துக்கொண்டிருக்கும் தத்துவங்களனைத்தையும் சேர்த்துத் தள்ளிவிடாமல் அவை இத்தனையென்று கணக்கிடுவதாலும், அவற்றின் குணங்களை யாராய்வதாலும் பயனில்லை. பிரபஞ்சத்தை யொரு சொப்பனத்தைப் போலெண்ணிக்கொள்ளவேண்டும்.

ஜாக்ரம் தீர்க்கம். சொப்பனம் க்ஷணிக மென்பது தவிர வேறு பேதமில்லை. ஜாக்ரத்தில் நடக்கும் விவகாரங்களெல்லாம் எவ்வளவு உண்மையாகத் தோன்றுகின்றனவோ அவ்வளவு உண்மை யாகவே சொப்பனத்தில் நடக்கும் விவ

காரங்களும் அக்காலத்திற் றோன்றுகின்றன. சொப்பனத்தில் மனம் வேறொரு தேகத்தை யெடுத்துக் கொள்ளுகிறது. ஜாக்ரம், சொப்பன மிரண்டிலும் நினைவுகளும் நாமரூபங்களும் ஏககாலத்தில் நிகழ்கின்றன.

நல்லமனமென்றும் கெட்டமனமென்று மிரண்டுமனங்களில்லை; மனமொன்றே. வாசனைகளே சுபமென்றும் அசுபமென்று மிரண்டுவிதம். மனம் சுபவாசனை வயத்தகாய் நிற்கும் போது நல்லமன மென்றும், அசுபவாசனைவயத்தகாய் நிற்கும்போது கெட்டமன மென்றும் சொல்லப்படும். பிறர் எவ்வளவு கெட்டவர்களாய்த் தோன்றினும் அவர்களை வெறுத்தலாகாது. விருப்பு வெறுப்புகளிரண்டும் வெறுக்கத்தக்கன. பிரபஞ்ச விஷயங்களி லதிகமாய் மனத்தை விடக்கூடாது. சாத்தியமானவரையில், அன்னியர் காரியத்தில் பிரவேசிக்கக்கூடாது. பிறருக்கொருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத்துக்கொள்ளுகிறான். இவ்வுண்மையை யறிந்தால் எவன்தான் கொடாதொழிவான்?

தானெழுந்தால் சகலமு மெழும். தானடங்கினுல் சகலமு மடங்கும். எவ்வளவுக் கெவ்வளவு தாழ்ந்து நடக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையுண்டு. மனத்தை யடக்கிக்கொண்டிருந்தால், எங்கேயிருந்தாலு மிருக்கலாம்.

முற்றிற்று.

உ

# உபதேச வுந்தியார்.

1. கன்மம் பயன்றரல் கர்த்தன தாணையாற்
கன்மங் கடவுளோ வுந்தீபற
கன்மஞ் சடமதா லுந்தீபற.

2. வினையின் விளைவு விளிவுற்று வித்தாய்
வினைக்கடல் வீழ்த்துமென் றுந்தீபற
வீடு தாராதென வுந்தீபற.

3. கருத்தனுக் காக்குநிட் காமிய கன்மங்
கருத்தைத் திருத்தியஃ துந்தீபற
கதிவழி காட்டுமென் றுந்தீபற.

4. திடமிது பூசை செபமுந் தியான
முடல்வாக் குளத்தொழி லுந்தீபற
வுயர்வாகு மொன்றிலொன் றுந்தீபற.

5. எண்ணுரு யாவு மிறையுரு வாமென
வெண்ணி வழிபட லுந்தீபற
வீசனற் பூசையென் றுந்தீபற.

6. வழுத்தலில் வாக்குச்ச வாய்க்குட் செபத்தில்
விழுப்பமா மானத முந்தீபற
விளம்புந் தியானமி துந்தீபற.

7. விட்டுக் கருதலி னாறுநெய் வீழ்ச்சிபோல்
விட்டிடா துன்னலே யுந்தீபற
விசேடமா மென்னவே யுந்தீபற.

8. அனியபா வத்தி னவனக மாகு
மனன்னிய பாவமே யுந்தீபற
வனைத்தினு முத்தம முந்தீபற.

9. பாவ பலத்தினாற் பாவனா தீதசற்
பாவத் திருத்தலே யுந்தீபற
பராபத்தி யாகுமென் றுந்தீபற.

10. உதித்த விடத்தி லொடுங்கி யிருத்த
லதுகன்மம் பத்தியு முந்தீபற
வதுயோக ஞானமு முந்தீபற.

11. வளியுள் ளடக்க வலைபடு புட்போ
லுளமு மொடுங்குமென் றுந்தீபற
வொடுக்க வுபாயமி துந்தீபற.

12. உளமு முயிரு முணர்வுஞ் செயலு
முளவாங் கிளைகளென் றுந்தீபற
வொன்றாகு மூலமென் றுந்தீபற.

13. இலயமு நாச மிரண்டா மொடுக்க
மிலயித் துளதெழு முந்தீபற
வெழாதுரு மாய்ந்ததென் றுந்தீபற.

14. ஒடுக்க வளியை யொடுங்கு முளத்தை
விடுக்கவே யோர்வழி யுந்தீபற
வீயு மதனுரு வுந்தீபற.

15. மனவுரு மாயமெய்ம் மன்னுமா யோகி
தனக்கோர் செயலிலை யுந்தீபற
தன்னியல் சார்ந்தானென் றுந்தீபற.

16. வெளிவிட யங்களை விட்டு மனந்தன்
னொளியுரு வோர்தலே யுந்தீபற
வுண்மை யுணர்ச்சியென் றுந்தீபற.

17. மனத்தி னுருவை மறவா துசாவ
மனமென வொன்றிலை யுந்தீபற
மார்க்கநே ரார்க்குமி துந்தீபற.

18. எண்ணங்க ளேமனம் யாவினு நானெனு
மெண்ணமே மூலமா முந்தீபற
யானே மனமென லுந்தீபற.

19. நானென் றெழுமிட மேதென நாடவுண்
ணான்றலை சாயுமென் றுந்தீபற
ஞானவி சாரமி துந்தீபற.

20. நானொன்று தானத்து நானானென் றொன்றது
தானாகத் தோன்றுமென் றுந்தீபற
தானது பூன்றமா முந்தீபற.

21. நானென்னுஞ் சொற்பொரு ளாமது நாளுமே
நானற்ற தூக்கத்து முந்தீபற
நமதின்மை நீக்கத்தா லுந்தீபற.

22. உடல்பொறி யுள்ள முயிரிரு ளெல்லாஞ்
சடமசத் தானதா லுந்தீபற
சத்தான நானல்ல வுந்தீபற.

23. உள்ள துணர வுணர்வுவே றின்மையி
னுள்ள துணர்வாகு முந்தீபற
வுணர்வேநா மாகுமென் றுந்தீபற.

24. இருக்கு மியற்கையா லீசசீ வர்க
ளொருபொரு ளாவரென் றுந்தீபற
வுபாதி யுணர்வேவே றுந்தீபற.

25. தன்னை யுபாதிவிட் டோர்வது தானீசன்
றன்னை யுணர்வதா முந்தீபற
தானா யொளிர்வதா லுந்தீபற.

26. தானு யிருத்தலே தன்னை யறிதலாந்
தானிரண் டற்றதா லுந்தீபற
தன்மய நிட்டையீ துந்தீபற.

27. அறிவறி யாமையு மற்ற வறிவே
யறிவாகு முண்மையீ துந்தீபற
வறிவதற் கொன்றிலை யுந்தீபற.

28. தனதியல் யாதெனத் தான்றெரி கிற்பின்
னனாதி யனந்தமென் றுந்தீபற
வகண்ட சிதானந்த முந்தீபற.

29. பந்தவீ டற்ற பரசுக முற்றவா
றிந்த நிலைநிற்ற லுந்தீபற
விறைபணி நிற்றலென் றுந்தீபற.

30. யானற் றியல்வது தேரி னெதுவது
தானற் றவமென்று லுந்தீபற
தானும் ரமணனென் றுந்தீபற.

உபதேச வுந்தியார்.

முற்றிற்று.

## தனி

தேகம் கடநிகர் சடமிதற் ககமெனுந் திகழ்விலதால்
நாகம் சடலமி றுயிலினி றினமுறு நமதியலாற்
கோகம் கரனெவ னுளனுணர்ந் துளருளக் குகையுள்ளே
சோகம் புரணவ ருணகிரி சிவவிபு சுயமொளிர்வான்.

உ

# ஆன்ம வித்தை.

## பல்லவி.

ஐயே ! யதிசுலபம்--ஆன்மவித்தை
ஐயே ! யதிசுலபம்.

## அநுபல்லவி.

நொய்யார் தமக்குமுளங் கையா மலகக்கனி
பொய்யா யொழியமிகு மெய்யா யுளதான்மா. (ஐயே!

## சரணங்கள்.

1. மெய்யாய் நிரந்தரந்தா னேயா யிருந்திடவும்
பொய்யா முடம்புலக மெய்யா முளைத்தெழும்பொய்
மையார் நினைவனுவு முய்யா தொடுக்கிடவே
மெய்யா ரிதயவெளி வெய்யோன் சுயமான்மா—
விளங்குமே ; இருளடங்குமே ; இடரொடுங்குமே;
இன்பம் பொங்குமே. (ஐயே !

2. ஊனு ருடலிதுவே நானு மெனுநினைவே
நானு நினைவுகள்சே ரோர்நா ரெனுமதனு
ளுனு ரிடமெதென் றுட் போனு னினைவுகள்போய்
நானு னெனக்குகையுட் டானய்த் திகழுமான்ம---
ஞானமே ; இதுவே மோனமே ; ஏகவானமே ;
இன்பத் தானமே. (ஐயே !

3. தன்னை யறிதலின்றிப் பின்னை யெதறிகிலென் ?
றன்னை யறிந்திடிற்பின் னென்னை யுளதறிய ?
பின்ன வுயிர்களில பின்ன விளக்கெனுமத்

தன்னைத் தனிலுணர மின்னுந் தனுளான்ம—
ப்ரகாசமே ; அருள்விலாசமே ; அகவிநாசமே ;
இன்ப விகாசமே. (ஐயே !

4. கன்மா நிகட்டவிழ சென்மா நிகட்டமெழ
வெம்மார்க் கமதனினு மிம்மார்க் கமிக்கெளிது
சொன்மா னததனுவின் கன்மா நிசிறிதின்றிச்
சும்மா வமர்ந்திருக்க வம்மா வகத்திலான்ம—
சோதியே ; நிதானு பூதியே ; இராது பீதியே ;
இன்பாம் போதியே. (ஐயே!

5. விண்ணை நியவிளக்குங் கண்ணை நியபொறிக்குங்
கண்ணை மனக்கணுக்குங் கண்ணைய் மனவிணுக்கும்
விண்ணை யொருபொருள்வே றெண்ணை திருந்தபடி
யுண்ணை டுளத்தொளிரு மண்ணை மலையெனுன்மா—
காணுமே ; அருளும் வேணுமே ; அன்பு பூணுமே;
இன்பு தோணுமே. (ஐயே !



ஸம்பூர்ணம்.